லியோ டால்ஸ்டாய்

இந்துக்களுக்கு ஒரு கடிதம்

முன்னுரை: மோ. க. காந்தி

தமிழில்: வானதி

லியோ டால்ஸ்டாய்

இந்துக்களுக்கு ஒரு கடிதம்

முன்னுரை: மோ. க. காந்தி

தமிழில்: வானதி

https://telegram.me/aedahamlibrary

Share & Support

https://t.me/aedahamlibrary

இந்துக்களுக்கு ஒரு கடிதம்.

லியோ டால்ஸ்டாய்
முன்னுரை - மோ. க. காந்தி
தமிழில் - வானதி

பதிப்புரிமை © 2020 Muthuprakash Ravindran

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

இந்தப் புத்தகத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள கதாபாத்திரங்கள் மற்றும் நிகழ்வுகள் அனைத்தும் கற்பனையானவையாகும். இது உண்மையான, வாழக்கூடிய அல்லது இறந்த நபருடன் ஒத்து இருந்தால், அது தற்செயலானதே ஆகும், ஆசிரியரால் குறிப்பிட்ட நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதல்ல.

இந்தப் புத்தகத்தின் எந்தப் பகுதியையும் வெளியீட்டாளரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி மறுஉருவாக்கம் செய்யவோ, அல்லது மீட்டெடுக்கும் முறைமையில் சேமிக்கவோ அல்லது வேறு ஏதேனும் வடிவம் அல்லது வகையில் மின்னணு, இயந்திரம், புகைப்பட நகலிடல், பதிவு செய்தல் மூலமாகவோ அல்லது வேறுவிதமாக அனுப்பவோக்கூடாது.

ISBN-13: 9781234567890
ISBN-10: 1477123456

கவர் வடிவமைப்பு: ஸ்ரீனிவாச கோபாலன்

காங்கிரஸின் கலை ஓவிய நூலகத்தின் கட்டுப்பாட்டு எண்:
2018675309
ஐக்கிய அமெரிக்காவில் அச்சிடப்பட்டது

லியோ டால்ஸ்டாய்

(செப்டம்பர் 9 , 1828 – நவம்பர் 20 , 1910)

லியோ டால்ஸ்டாய் (Leo Tolstoy) என அழைக்கப்படும் லெவ் நிக்கலாயெவிச் டால்ஸ்டாய் ஒரு ரஷ்ய எழுத்தாளர் ஆவார். இவர் புதின எழுத்தாளர்களுள் மிகச் சிறந்தவர்களுள் ஒருவராக மதிக்கப்படுகிறார். இவரது மிகச் சிறந்த ஆக்கங்களான போரும் அமைதியும், அன்னா கரேனினா ஆகியவை, 19 ஆம் நூற்றாண்டு ரஷ்ய வாழ்க்கையை விபரிப்பதில் உண்மைவாதப் புனைகதைகளின் உயர்நிலையைக் காட்டுகின்றன.

வானதி

வானதி என்ற புனைபெயரில் எழுதும் முத்து பிரகாஷ் , 1976இல் பிறந்தவர். மின்னணுவியலில் பொறியியல் பட்டம் பெற்ற அவர் , 23 வருடங்களாகத் தொழில் நுட்பத்துறையில் பல பொறுப்புகளில் வகித்து வரும் இவர் , தமிழின் மீது தீராத ஆர்வம் கொண்டவர்.

தொடர்பு : கைபேசி : 9840552644

இவரின் பிற புத்தகங்கள் (அனைத்தும் கிண்டிலில் கிடைக்கின்றது) :

1. 1877: தாது வருடப் பஞ்சம்
2. வரலாற்றில் வழிகாட்டிய செப்பேடுகள்
3. தென்னிந்திய கிராம தெய்வங்கள்
4. நீலகிரி: பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிவசமுத்திரம் மற்றும் நீலகிரி பயணக் குறிப்புகள்
5. கொற்கை
6. பிரைட் அண்ட் பிரிஜூடிஸ் : புத்தகம் ஒன்று
7. பிரைட் அண்ட் பிரிஜூடிஸ்: புத்தகம் இரண்டு
8. வரலாற்றின் சுவட்டில்... (பயணக் கட்டுரைகள்)
9. தென்னிந்திய நாட்டுப்புறக் கதைகள்
10. அடர் வனத்தின் யட்சி (கவிதைகள்)
11. Temples of South India: And a Few Museums
12. குடுமி பற்றிய சிந்தனைகள்
13. பல்லவர்கள் : தொன்மையியல் வரலாறு: பாகம் I & II

உள்ளடக்கங்கள்

தலைப்புப் பக்கம்
பதிப்புரிமை
மொழிபெயர்ப்பாளர் உரை
கடிதங்கள்
அறிமுகம்
இந்துக்களுக்கு ஒரு கடிதம்.
இந்த ஆசிரியரின் புத்தகங்கள்

மொழிபெயர்ப்பாளர் உரை

மே 22, 1908இல் வங்காள பத்திரிகையாளர் , தாரகநாத் தாஸ் என்பவர் கனடாவில் இருந்து கடிதம் ஒன்றை எழுதி , டால்ஸ்டாயை இந்திய மக்களின் நிலை குறித்துக் கவனம் கொள்ளக் கேட்கிறார். உலகில் போரில் இருப்பவர்களை விட அதிகமானோர் இந்தியாவில் பசியால் இறக்கிறார்கள் என்று எழுதுகிறார். இவர் எழுதிய கடிதத்தின் பிரதியை என்னால் கண்டறிய முடியவில்லை. அது இந்தப் புத்தகத்திற்கு முழுமையைத் தந்திருக்கும்.

இந்தக் கடிதத்திற்கு டால்ஸ்டாய் உடனே பதில் எழுத ஆரம்பிக்கிறார். ஆனால் , மேலும் இந்தியா பற்றிய சமூக , வரலாற்று செய்திகளை வாசித்து , பல முறை எழுதி , திருத்தி முடிக்க 6 மாதங்கள் ஆகிறது. தனது பதிலை அவர் டிசம்பர் மாதம் அனுப்புகிறார். தனிப்பட்ட கடிதமாக இல்லாமல் , தனது பதிலை பதிப்பிக்கிறார்.

இந்தப் பதிப்பின் ஆங்கில மொழிபெயர்ப்பின் பிரதி , லண்டனில் தென்னாபிரிக்கப் போராட்டம் குறித்த பேச்சுவார்த்தைக்கு வந்திருக்கும் மோகன்தாஸ் காந்திக்குக் கிடைக்கிறது. சத்தியாகிரகத்தையும் , ஒத்துழையாமை போராட்டத்தையும் செம்மை படுத்திக் கொண்டிருக்கும் இளம் காந்திக்கு , இந்தக் கடிதம் அவரது நம்பிக்கைகளுக்கு ஊக்கம் தருவதாக இருக்கிறது. எனவே அதைப் பதிப்பிக்க அனுமதி கோரி டால்ஸ்டாய்க்கு எழுதுகிறார்.

இது குறித்துக் காந்தியும் , டால்ஸ்டாயும் பரிமாறிக் கொண்ட மூன்று கடிதங்களையும் இந்தப் புத்தகத்தில் மொழிபெயர்த்து இருக்கிறேன். வரலாற்றுப் பதிவில் இது

ஒரு தொடர்ச்சியையும் , இந்தப் பிரதியின் புரிதலின் அளவை மேம்படுத்தும் என்றும் நம்புகிறேன்.

தாரகநாத் தாஸ் , டால்ஸ்டாயின் கடிதத்திற்கு ஒரு நீண்ட மறுப்புக் கடிதம் எழுதியிருக்கிறார். இந்தியர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதி எப்படி வன்முறையை நியாயப்படுத்துகிறது என்பதைச் சாராம்சமாகக் கொண்ட அந்தக் கடிதம் , இந்தப் புத்தகத்தின் மையக் கருத்திற்கு ஒவ்வாததால் அதை மொழிபெயர்க்காமல் விடுத்துவிட்டேன். ஆர்வம் இருப்பவர்கள் அதை நேரடியாகப் படித்துக் கொள்ளலாம்.

டால்ஸ்டாய் இந்தக் கடிதத்தில் நாகரிக உலகின் வன்முறையைச் சுட்டிக் காட்டி , அன்பின் வழியே பயணிப்பதன் அவசியத்தை எடுத்துக் கூறுகிறார். வரலாற்றை எடுத்துக் காட்டி வன்முறையை அன்பால் அணுகுவது எவ்வளவு முக்கியம் என்றும் கூறுகிறார். காந்தி , டால்ஸ்டாயை தனது ஆசிரியராக ஏன் அணுகினர் என்பது இந்தச் சிறு நூலில் விளங்கி விடும்.

டால்ஸ்டாய் கிருஷ்ணரின் வாசகங்களைப் பல இடங்களில் மேற்கோள் காட்டுகிறார். அவை பகவத் கீதையாக இருக்க வேண்டும் என்று நினைத்தாலும் , என்னால் அவற்றின் மூலத்தைக் கண்டறிய முடியவில்லை. எனவே , அவற்றை அப்படியே மொழி பெயர்த்துவிட்டேன். ஆங்கிலத்தில் இருந்து ருஷ்ய மொழியில் முதலிலும் , பின்னர் ருஷ்ய மொழியில் இருந்து ஆங்கிலத்திற்கும் , அதன் பின் இப்போது தமிழிற்குமான மொழிபெயர்ப்புகளில் இந்த விவரம் காணாமல் சென்றிருக்க வேண்டும். காந்தியும் அவரது கடிதத்தில் கிருஷ்ணரின் வாசகங்கள் எங்கிருந்து எடுக்கப்பட்டன என்று கேட்கிறார். அதற்கு நேரடியாக டால்ஸ்டாய் பதில் சொல்லவில்லை. எனவே , காந்தியும் அதை அப்படியே மொழிபெயர்த்திருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். மேலும் , ஒரு பகுதியில் டால்ஸ்டாய் திருக்குறளின் ' இன்னா செய்யாமை ' அதிகாரத்தில் ஆறு

குறள்களை மேற்கோள் காட்டுகிறார். இவற்றை என்னால் கண்டறிய முடிந்ததால் , அவரை நேரடியாகக் குறளாகவே தந்து விட்டேன்.

தனிப்பட்ட முறையில் , காந்தியை சிலாகிப்பவன் என்ற , முறையிலும் டால்ஸ்டாயின் புதினங்களை வாசித்து மகிழ்ந்தவன் என்ற முறையிலும் , மிகுந்த மகிழ்வை தந்த மொழிபெயர்ப்பு இது. காந்தியையும் , அம்பேத்கரையும் மொழி பெயர்க்க வேண்டும் என்பது எனது நெடு நாள் விருப்பம். முழுவதுமாக இல்லை என்றாலும் , இந்தப் புத்தகம் அதில் ஒரு பாகத்தை நிறைவேற்ற உதவியது.

முகப்பை வடிவமைத்த அழிசி பதிப்பகத்தின் ஸ்ரீனிவாச கோபாலனுக்கு நன்றி.

சரி பார்த்து , திருத்திக் கொடுத்த என் மனைவி ஜெயஸ்ரீக்கு அன்பும் , நன்றிகளும்.

முத்து பிரகாஷ். இர
மதுரை.
23 டிசம்பர் 2020.

கடிதங்கள்

வெஸ்ட்மின்ஸ்டர் பேலஸ் ஹோட்டல்
4 , விக்டோரியா தெரு
லண்டன்
அக்டோபர் 1 , 1909

ஐயா

கடந்த மூன்று வருடங்களாக ட்ரான்ஸ்வால் பிரதேசத்தில் (தென்னாப்பிரிக்கா) நிலவி வரும் சூழலை பற்றி உங்கள் கவனத்தை வேண்டுகிறேன்.

அங்குப் பிரிட்டிஷ் இந்தியர்கள் 13000 பேர் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் அங்கு பல சட்ட சம்பந்தமான பிரச்சனைகளால் பல வருடங்களாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலும் இவர்கள் வணிகத்தில் வெற்றிகரமாக இருப்பதால் ஏற்படும் பொறாமையின் காரணமாக நிறவெறியினாலும் , இனவெறியினாலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இதன் உச்சக்கட்டம் மூன்று வருடங்களுக்கு முன் இங்கு ஏற்படுத்தப்பட்ட மனிதத்தன்மையில்லாத சட்டத்தின் மூலம் எட்டப்பட்டது.

இது மாதிரியான ஒரு சட்டத்திற்கு அடிபணிவது உண்மையான ஆன்மீகத்திற்கு எதிரானது என்பது என் கருத்து. நானும் , என்னுடைய நண்பர்கள் சிலரும் தீமையை ஒத்துழையாமை மூலம் எதிர்ப்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டு இருக்கிறோம். நீங்கள் எழுதியவற்றில் சிலவற்றைப் படித்திருக்கிறேன். அவை என் மனதில் மிகுந்த ஆழமான பாதிப்பை ஏற்படுத்தி இருக்கின்றன. எனவே இந்தச் சட்டத்தைப் பின்பற்றக் கூடாது என்றும் , அதை மீறுவதற்காகச் சிறை செல்ல வேண்டும் அல்லது என்ன தண்டனையைச் சட்டம் சொல்கிறதோ அதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பிரிட்டிஷ் இந்தியர்களிடம் நாங்கள் எடுத்துக் கூறினோம். முடிவாக , ட்ரான்ஸ்வாலில் இருந்து பிரிட்டிஷ் இந்தியர்களில் பாதி மக்கள், இந்தச் சட்டத்தை மதிப்பதை விட வேறு பிரதேசங்களுக்குச் செல்வது மேல் என்று இங்கிருந்து சென்று விட்டனர். அவர்களால் சிறை செல்வதற்கோ , போராட்டத்தில் தீவிரமாக ஈடுபடுவதற்கோ முடியவில்லை. இங்கிருக்கும் மற்றவர்களில் , 2500 பிரிட்டிஷ் இந்தியர்கள் தங்கள் மனசாட்சியின் படி , ஐந்து முறையேனும் சிறைக்குச் சென்று இருக்கின்றனர். இவர்களின் சிறைவாசம் நான்கு நாட்களில் இருந்து ஆறு மாதம் வரையும் , பலருக்கும்

கடுங்காவலுமாக இருந்தது. பலரும் தங்கள் செல்வம் அனைத்தையும் இழந்து விட்டனர்.

இப்போதும் ட்ரான்ஸ்வால் சிறைகளில் நூறுக்கும் மேற்பட்ட ஒத்துழையாமை வீரர்கள் சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர். இவர்களில் பலரும் தினசரி கூலி பெறும் ஏழைகள். இதனால் , இவர்களது மனைவி , மக்களை நாங்கள் பொதுமக்களிடம் நிதி வசூலித்துக் காப்பாற்றி வருகிறோம்.

பிரிட்டிஷ் இந்தியர்கள் மிகுந்த தைரியத்துடன், இந்தச் சோதனையை எதிர்கொண்டாலும் அவர்கள் மிகுந்த சிரமத்திற்கும் ஆளாகி உள்ளனர். இந்தப் போராட்டம் இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. எப்போது முடியும் என்பதும் நிச்சயமாகத் தெரியவில்லை. முரட்டுத்தனம் தோல்வியடையும் இடத்தில் எங்களது ஒத்துழையாமை வெற்றி அடையும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இந்தப் போராட்டம் நீண்ட நாட்களாக நடப்பதற்கு , எங்களது பலவீனமே காரணம். அதனாலேயே அரசாங்கம் எங்களால் நீண்ட நாட்களுக்குப் போராட்டத்தைத் தொடர முடியாது என்று நம்புகிறது.

எனவே இந்தப் போராட்டத்தை முடித்து வைக்கக் கோரி , அரசாங்கத்திடம் எங்களது நியாயத்தை எடுத்துக் சொல்ல வேண்டியே இங்கு நண்பர்களுடன் வந்திருக்கிறோம். ஒத்துழையாமை வீரர்கள் அரசாங்கத்திடம் எத்தகைய கோரிக்கையும் வைக்க விரும்பவில்லை என்றாலும் , போராட்டத்தில் மிகுந்த உறுதியில்லாத சிலரின் வேண்டுதலின் பேரிலேயே நாங்கள் இதைச் செய்ய வேண்டி வந்தது. இது அவர்களின் பலவீனத்தையே காட்டுகிறது. நான் இங்குப் பார்த்த வரை , ஒத்துழையாமை இயக்கத்தின் நீதி நெறியையும் , செயல் திறனையும் எடுத்துச் சொல்ல ஒரு கட்டுரைப் போட்டியை நடத்தலாம் என்று யோசிக்கிறேன். இதனால் இயக்கம் மக்களிடையே பிரபலமாவதோடு , அவர்களை இது குறித்துச் சிந்திக்கவும் வைக்கும். இது போன்ற போட்டி நடத்துவதன் அறம் குறித்து ஒரு நண்பர் கேள்வி

எழுப்பினார். ஒத்துழையாமையின் உண்மையான நோக்கத்தை மறுத்து , அது குறித்த கருத்தை விலைக்கு வாங்குவதற்கு ஒத்தது என்பது அவரது கருத்து. இது குறித்து உங்களது கருத்தை எனக்கு எழுத முடியுமா ? இப்படிப் போட்டி நடத்துவதில் தவறில்லை என்று நீங்கள் நினைத்தால் , இது குறித்து எழுத யாரை நான் அணுகலாம் என்பது பற்றிய உங்களது கருத்தையும் எழுதவும்.

இன்னமும் ஒரு விவரத்தைக் குறித்து மட்டும் கேட்டுக் கொள்கிறேன். இப்போது இந்தியாவில் இருக்கும் நிலை குறித்து இந்துக்களுக்கு ஒரு கடிதத்தின் பிரதி ஒன்று எனக்கு நண்பர் ஒருவரால் தரப்பட்டது. அது உங்களின் கருத்துக்களைப் பிரதிபலிப்பதாக இருந்தது. அதை மொழிபெயர்த்து , தனது செலவில் 20,000 பிரதிகள் விநியோகிக்க எனது நண்பர் முடிவு செய்திருக்கிறார். ஆனால் , அதன் மூலப்பிரதியை எங்களால் கண்டறிய முடியவில்லை. எனவே , அதை எழுதியது நீங்கள்தான் என்ற உறுதி இல்லாத நிலையில் அதைப் பதிப்பிப்பது நியாயமாகத் தெரியவில்லை. அந்தப் பிரதியை நான் இந்தக் கடிதத்துடன் இணைத்துள்ளேன். அதை நீங்கள் சரிபார்த்து , இது உங்கள் கடிதம் என்று உறுதிப்படுத்தி , நீங்கள் எழுதியதன் உண்மையான பிரதி என்பதையும் உறுதிப்படுத்தி , இவ்வாறு நாங்கள் பதிப்பிப்பது குறித்தும் உங்கள் அனுமதியை வழங்க வேண்டிக் கொள்கிறேன். அத்துடன் நீங்கள் எதுவும் சேர்க்க நினைத்தால் , அதையும் எழுதவும்.

அத்துடன் என்னுடைய பரிந்துரை ஒன்றும் உள்ளது. உங்களது கடைசி பத்தியில் , நீங்கள் மறுபிறப்பு குறித்து மறுத்து எழுதியிருக்கிறீர்கள். இது குறித்து நீங்கள் ஆழ்ந்து படித்திருக்கிறீர்களா என்று தெரியவில்லை (இவ்வாறு நான் சொல்வதற்கு மன்னிக்கவும்.) மறுபிறப்பு அல்லது மறுபிறவி என்பது இந்தியாவில் மட்டுமல்லாமல் சீனாவிலும் உள்ள பல ஆயிரக்கணக்கான மக்களின் நம்பிக்கையாகும். பலருக்கும் இது அவர்களின் வாழ்வின் அனுபவத்தின் உண்மையாகவே இருக்கிறது. வாழ்வின்

பல மர்மங்களை இது எளிதாக விளக்குகிறது. ட்ரான்ஸ்வாலின் சிறைகளில் வாடும் பல ஒத்துழையாமை வீரர்களுக்கு இந்த நம்பிக்கை ஒரு பெரிய ஆறுதலாகும். நான் உங்களை மறுபிறவி குறித்த உண்மையை நம்புமாறு கேட்கவில்லை. மாறாக , நீங்கள் மறுத்து பேசும் விவரங்களில் இருந்து அதை விலக்க மட்டுமே கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுடைய இந்தக் கடிதத்தில் நீங்கள் கிருஷ்ணரின் வாசகங்களை விரிவாகக் கொடுத்து இருக்கிறீர்கள். அவற்றை எந்தப் புத்தகத்தில் இருந்து எடுத்துள்ளீர்கள் என்பதைக் கூறினால் எனக்கு உதவியாக இருக்கும். நீண்ட கடிதம் எழுதி உங்களைத் தொந்தரவு செய்துவிட்டேன். உங்களை மரியாதையுடன் பின்பற்றுபவர்கள் , உங்களுக்குத் தொந்தரவு தராமல் இருப்பது கடமையாகும். உங்களுக்கு முற்றிலும் அந்நியனான நான் , உண்மையைக் கண்டறியும் வகையிலும் , பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டியும் எழுதியிருக்கிறேன். இவற்றின் தீர்வுகளை உங்களது வாழ்வின் நோக்கமாகக் கொண்டிருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையில் எழுதியிருக்கிறேன்.

மரியாதையுடன்
உங்கள் சேவகன்
மோ. க. காந்தி.

டால்ஸ்டாயின் பதில் - 7-10-1909

யஸ்நயா போல்யானா , அக் 7 , 1909.

இப்போதுதான் உங்களது மிகவும் சுவாரசியமான கடிதம் கிடைத்தது. அதை வாசிக்கவும் மிகவும் மகிழ்வைத் தந்தது. ட்ரான்ஸ்வால்லில் இருக்கும் உங்களது அனைத்து சகோதரர்களையும் , தொழிலாளர்களையும் கடவுள் காப்பாராக. மென்மைக்கும் , முரட்டுத்தனத்திற்குமான

மோதல் , எளிமையும் அன்பும் ஒரு புறமும் , வன்முறையும் , கர்வமும் இன்னொரு புறமுமாக நடக்கும் மோதல் இங்கும் எங்களால் உணரப்படுகிறது. ஆன்மீக கடமைக்கும் , நாட்டின் சட்டங்களுக்கும் இடையே போரை எதிர்ப்பது குறித்த மோதல் இங்கே நிகழ்கிறது. அதுவும் இப்போது அடிக்கடி நிகழ்கிறது.

இந்துக்களுக்கு ஒரு கடிதம் நான் எழுதியதே. அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தது மகிழ்ச்சியைத் தருகிறது. கிருஷ்ணாவை பற்றிய புத்தகத்தின் தலைப்பை மாஸ்கோவில் இருந்து அனுப்ப சொல்லியிருக்கிறேன்.

மறுபிறவி குறித்த எதையும் நான் நீக்கமாட்டேன். என்னைப் பொறுத்த வரை மறுபிறவி குறித்த நம்பிக்கை மனிதர்களிடையே ஆழ்ந்த முறையில் ஏற்பட வழியில்லை. அது ஆத்மாவின் அழிவில்லாத தன்மை குறித்தும் , கடவுளின் அன்பிற்கும் , உண்மைக்கும் மாறாக இருக்கிறது. ஆனால் , உங்களது கோரிக்கைக்காக , அது குறித்த பத்திகளை நீங்கள் நீக்க நினைத்தால் அதற்கு அனுமதி அளிக்கிறேன்.

நீங்கள் என்னுடைய எழுத்துக்களை இந்திய மொழிகளில் தொகுத்து , பதிப்பிப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

இது போன்ற ஆன்மீக பதிப்புகளில் , விற்பனை பணம் பற்றிய பேச்சுக்களுக்கு இடமில்லை.

உங்களைச் சகோதரத்துவத்துடன் அரவணைத்து , இந்தக் கடித போக்குவரத்துக்கு மகிழ்ச்சி அடைகிறேன்.

லியோ டால்ஸ்டாய்.

காந்தியின் நன்றிக் கடிதம்

வெஸ்ட்மின்ஸ்டர் பேலஸ் ஹோட்டல்
4 , விக்டோரியா தெரு
லண்டன்
10.11.1909

அன்புள்ள ஐயா

' இந்துக்களுக்கு ஒரு கடிதம் ' பற்றியும் , நான் எழுதிய மற்ற விவரங்கள் குறித்தும் நீங்கள் எழுதிய பதில் கடிதத்தை நன்றியுடன் பெற்றுக் கொண்டேன்.

உங்கள் உடல் நிலை சரியாக இல்லை என்பதைக் கேள்விப்பட்டு , உங்களுக்கு நன்றி தெரிவிப்பதை சற்று தள்ளி வைத்திருந்தேன். தற்சமயம் நான் சந்தித்த திரு. ஆயில்மெர் மௌட் , உங்கள் உடல் நலம் நன்றாக இருப்பதாகவும் , தினமும் காலையில் நீங்கள் உங்கள் கடிதங்களை வாசித்து , பதில் அனுப்புவதாகவும் கேள்வியுற்று மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். அதுவே உங்களது சிந்தனைகளுக்கு முக்கியமான சில நிகழ்வுகளை எழுத ஊக்கம் கொடுத்தது.

இத்துடன் , தென்னாப்பிரிக்காவில் இருக்கும் என்னுடைய ஆங்கிலேயே நண்பர் , என் வாழ்வையும் , போராட்டத்தையும் பற்றி எழுதிய புத்தகத்தை நீங்கள் வாசிக்க அனுப்புகிறேன். உங்களுடைய ஆதரவை பெறுவதற்கு நான் மிகவும் ஆவலாக இருப்பதால் , இந்தப் புத்தகத்தை அனுப்புவதற்குப் பொறுத்தருள வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை , ட்ரான்ஸ்வால் இந்தியர்களின் போராட்டமே இன்றைய நவீன உலகின் மகத்தான போராட்டமாகும். இந்தப் போராட்டத்தின் நோக்கம் மட்டுமன்றி , அதை அடைவதற்குச் செல்லும் வழியுமே இந்தப் பெருமைக்குக் காரணம் என்பது எனது கருத்து. எந்தத் தன்னலமும் இல்லாமல் , இந்தப் போராட்டத்தில் பங்கெடுத்தவர்களில் குறைந்தது 50 சதவிகிதம் பேரேனும் சிறைக்குச் சென்றிருப்பது இந்தப் போராட்டத்தின்

சிறப்பாகும். ஆனால் இந்தப் போராட்டத்தை மற்றவர்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டி இருக்கிறது. நீங்கள் மிகுந்த புகழுடன் இருக்கிறீர்கள். திரு. டோக் அவர்களின் புத்தகத்தில் இருக்கும் விவரங்கள் உங்களுக்குத் திருப்தி தருவதாக இருந்தால் , உங்களது புகழை சற்று எங்கள் போராட்டத்தைக் கவனப்படுத்த உபயோகப்படுத்த முடியுமா ? அது பொய் , வெறுப்பு மீது ஆன்மிகம் , அன்பு மற்றும் உண்மை முதலியவற்றின் வெற்றியாக இருக்கும். அது இந்தியா மற்றும் உலகின் பல கோடி நசுக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை தருவதாகவும் , இந்தியாவில் வன்முறையை வேண்டிக் கொண்டிருப்பவர்களை வெற்றி பெறவும் உதவும். இறுதிவரை உறுதியோடு போராட்டத்தை நடத்தினால் , அப்படி நடத்துவோம் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை , வெற்றியை அடைவோம் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. இதற்கு மேலே சொன்ன முறையில் கிடைக்கும் உங்களது ஆதரவு பெரிதும் உதவும்.

நான் லண்டனில் நடத்தி வந்த பேச்சுவார்த்தை முறிந்து விட்டது. எனவே , எனது சக தோழர்களோடு நான் இந்த வாரம் தென்னாப்பிரிக்கா செல்கிறேன். அங்கு உடனடியாக கைது செய்யப்படுவேன் என்று எதிர்பார்க்கிறேன். எனது மகனும் என்னுடன் போராட்டத்தில் இணைந்திருக்கிறான் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வாரம் அவனுக்கு ஆறு மாதம் கடுங்காவல் சிறை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த போராட்டத்தில் அவன் நான்காவது முறையாக சிறை சென்றிருக்கிறான்.

நீங்கள் இந்தக் கடிதத்திற்குப் பதில் அனுப்ப விழைந்தால் , ஜோகன்னஸ்பேர்க் , த. பெ. எண் 6522 என்ற முகவரிக்கு எழுதவும்.

உங்கள் உடல்நலத்தை வேண்டும் ,
தங்கள் சேவகன் ,
மோ. க. காந்தி.

அறிமுகம்

மோ. க. காந்தி.

'பிரீ இந்துஸ்தான்' பத்திரிகையின் ஆசிரியருக்கு டால்ஸ்டாய் , ருஷ்ய மொழியில் எழுதிய கடிதத்தின் மொழிபெயர்ப்பே இங்குப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. பலருடைய கைகளை மாறி , இந்தக் கடிதம் என்னுடைய நண்பர் ஒருவரின் மூலம் என்னிடம் வந்து சேர்ந்தது. டால்ஸ்டாய் அவர்களின் எழுத்தின் மீது எனக்கு இருந்த மரியாதையை உணர்ந்து இருந்ததால் எனது நண்பர் அதைப் பதிப்பிக்க முடியுமா என்றும் கேட்டுக் கொண்டார். உடனடியாக அதற்கு ஒப்புக் கொண்டு , நானே அதைக் குஜராத்தியில் மொழிபெயர்க்க முடிவு செய்தேன். மற்றவர்களை இந்திய மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்க்க ஊக்குவிக்கவும் முடிவு செய்தேன்.

என்னிடம் இருந்தது தட்டச்சுச் செய்யப்பட்ட பிரதியாகும். எனவே அதன் ஆசிரியரிடம் சரி பார்த்து , அவரது

அனுமதியும் பெற்று விட்டேன்.

என்னுடைய வழிகாட்டியாக நான் பல நாட்களாகக் கருதும் ஆசிரியரின் கடிதத்தைப் பதிப்பித்து உலகிற்கு வழங்க ஒரு சிறு பங்கு ஆற்றுவதைப் பெருமை வாய்ந்ததாகக் கருதுகிறேன்.

தங்களுக்கு ஒரு சொந்த நாடு வேண்டும் என்பது ஒவ்வொரு இந்தியருக்கும் இருக்கும் ஆசையாகும். அதை அவர்கள் ஒப்பு கொண்டாலும் , கொள்ளாவிட்டாலும் , அவரது மனதின் ஓரத்தில் ஆசை இருக்கும். ஆனால் , இதை எப்படி அடைவது என்பதற்கு இந்திய தேசியவாதிகளிடையே பலவித கருத்துக்கள் இருக்கின்றன. அதை அடைய செல்ல வேண்டிய பாதை குறித்தும் பல வேறுபாடுகள் இருக்கின்றன.

இதை அடைவதற்குப் பலராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட , காலத்தினால் உறுதி செய்யப்பட்ட முறை , வன்முறையாகும். சர் கர்சன் வைலியின் கொலை , இந்த முறையின் மிகவும் மோசமான மற்றும் வெறுக்கக்கூடிய உதாரணமாகும். கொடுங்கோன்மையை ஒழிக்க வன்முறையை வழியாகக் கருதுவதை மாற்றி , தீமையை அகிம்சை மூலம் எதிர்க்கவேண்டும் என்பதே டால்ஸ்டாயின் வாழ்வின் செய்தியாகும். வன்முறையின் மூலம் வெளிப்படும் வெறுப்பை , தன்னை வருத்திக் கொள்ளும் அன்பின் மூலம் வெல்லுவதே அவரது வழி. அன்பின் வழியில் அவர் எந்தச் சமரசமும் செய்து கொள்வதில்லை. மனிதகுலத்தை வருத்தும் அனைத்து பிரச்சினைகளுக்கும் அவர் இதைத் தீர்வாகக் கூறுகிறார்.

மேற்கத்திய உலகின் மிகப்பெரிய சிந்தனையாளர்களில் ஒருவரும் , மிகப்பெரிய எழுத்தாளர்களில் ஒருவரும் , வன்முறையின் தீமையை ஒரு படைவீரனாக நேரில் கண்டவருமான டால்ஸ்டாய் , நவீன வன்முறை ஆயுதங்களைத் தேடி வரும் ஜப்பான் நாட்டை ' பெரும் அழிவை ' நோக்கி செல்வதாகக் கூறும் போது , பிரிட்டிஷ்

அரசாங்கத்தை எதிர்த்துக் கொண்டிருக்கும் நாமும் சற்று நிதானித்து , நாம் ஒரு தீமையை , இன்னொன்றால் மாற்ற போகிறோமா என்பதை யோசிக்க வேண்டும். ஐரோப்பிய மக்களை நவீன வளர்ச்சி என்ற பெயரில் , அவர்களின் மனித தன்மையை முழுவதுமாகச் சிதைத்து , அடிமை நிலையில் வைத்திருக்கும் பெரும் தொழிற்சாலைகளும் , துப்பாக்கி தொழிற்சாலைகளும் கொண்ட நிலைக்கு, மிகப்பெரும் மதங்களின் ஆரம்ப இடமான இந்தியா செல்லும் என்றால் நம்மால் ஒரு நாடாகப் பரிணாமிக்க முடியாது.

இந்தியாவில் ஆங்கிலேயர்கள் இருப்பதை நாம் விரும்பவில்லை என்றால் , அதற்கான விலையைத் தர நாம் தயாராக இருக்க வேண்டும். அதையே டால்ஸ்டாய் சுட்டிக் காட்டுகிறார். ' தீமையை எதிர்க்காதீர்கள். ஆனால் தீமையில் பங்கெடுக்கவும் செய்யாதீர்கள். தீமையை வளர்க்கும் நீதி மன்றங்களிலோ , வரி வசூலிக்கும் வன்முறையிலோ , எல்லாவற்றிலும் மோசமான படைவீரனாகவோ இருக்காதீர்கள். அப்படி இருந்தால் உலகில் யாரும் உங்களை அடிமைப்படுத்த முடியாது. ' என்கிறார் யஸ்நயா போல்யானாவைச் சேர்ந்த துறவி. அவர் சொல்வதன் உண்மையை யாரால் மறுக்க முடியும்? ' இருபது கோடி மக்களை ஒரு வணிக நிறுவனம் அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது. இதை மூடநம்பிக்கை இல்லாத மனிதனிடம் சொல்லிப் பாருங்கள். அவனால் இதை நம்பவும் முடியாது. மிகவும் சாதாரணமான , மிகுந்த பலம் இல்லாத முப்பது ஆயிரம் நபர்கள் , அறிவும் , ஆற்றலும் கொண்ட , விடுதலையை விரும்பும் இருபது கோடி மக்களை அடிமை படுத்தி வைத்திருப்பதை எப்படிப் புரிந்து கொள்வது ? இதிலிருந்து ஆங்கிலேயர்கள் இந்தியர்களை அடிமைப்படுத்தவில்லை , இந்தியர்களே தங்களை அடிமைகளாக வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லையா ? '

டால்ஸ்டாய் சொல்வதை எல்லாம் நாம் ஒப்புக் கொள்ளத் தேவையில்லை. அவர் சொல்வதில் பல சரியான

விவரங்களுடன் இல்லை. ஆனால் , இன்றைய அடிமை நிலை பற்றிய அவரது உண்மையை மறுக்க முடியாது. உடலின் மீதான ஆன்மாவின் சக்தியும் , ஆன்மாவின் குணமான அன்பின் மூலம் , நம்முள் இருக்கும் தீய உணர்வுகளின் ஆதிக்கத்தை வெல்ல முடியும் என்று அவர் கூறுவதை உணர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

அவர் கூறுவது எதுவும் புதிதான கருத்துக்களும் அல்ல. ஆனால் , பழைய உண்மைகளை அவர் கூறும் விதம் மிகவும் ஆற்றல் மிகுந்தது. அவரது வாதம் மறுக்க முடியாதது. எல்லாவற்றிற்கும் மேல் , அவர் உபதேசிப்பதை அவரே பின்பற்றவும் செய்கிறார். அவர் சொல்வதை நாம் ஒப்புக் கொள்ள வைக்க முனைகிறார். தீவிரத்துடனும் , உண்மையுடனும் பேசுகிறார். அதுவே அவரை வாசிக்க வேண்டியதன் அவசியம்.

மோ. க. காந்தி.
19 நவம்பர் , 1909.

இந்துக்களுக்கு ஒரு கடிதம்.

லியோ டால்ஸ்டாய்

எங்கும் இருப்பது ஒன்றே. மக்கள் இதையே பல பெயர்களில் அழைக்கின்றனர்.

- வேதம்

தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.

- யோவான் I IV 6.

கடவுள் ஒருவரே. நாம் அவரின் சிறு பாகங்கள்.

- வேதங்களின் வெளிப்பாடு , விவேகானந்தர்.

/

"ஆசைகளையும் , மாயைகளையும் தூண்டக்கூடிய பூவுலகின் சுகங்களில் மனதை லயித்துவிடாதே. அப்படி லயித்து விட்டால் , வாழ்க்கையின் கடினமான பாதையில் , என்னிடமிருந்து தூரமாக இழுத்து செல்லப்பட்டு விடுவாய். வாழ்க்கையின் வேர்களில் எப்போதெல்லாம் உன் கால்கள் சிக்கிவிட்டதாக எண்ணுகிறாயோ , அப்போதெல்லாம் நான் உனக்காக வகுத்த பாதையிலிருந்து தூரமாக விலகிச் சென்றுவிட்டதை உணர்ந்து கொள். ஏனென்றால் , நான் உனக்காகப் பூக்கள் தூவப்பட்ட அகலமான , மென்மையான பாதையை அமைத்திருக்கிறேன். உன் முன் ஒரு விளக்கையும் வைத்திருக்கிறேன். நீ வழி தவறிவிடக் கூடாது என்பதற்காக. "

- கிருஷ்ணர்

உங்களுடைய கடிதமும் , உங்கள் பத்திரிகையின் இரண்டு பிரதிகளும் கிடைத்தது. அவற்றை வாசிப்பது எனக்கு மிகவும் சுவாரசியமாக இருந்தது. ஒரு சிறு கூட்டம் , பெரும்பாலான மக்களை ஒடுக்குவதும் , அதனால் ஏற்படும் மனசோர்வும் சமீப காலங்களில் எனது கவனத்தை ஈர்த்து வந்துள்ளது. இது குறித்து நான் பொதுவாக என்ன நினைக்கிறேன் என்றும் , உங்கள்

கடிதத்திலும் , பத்திரிகையிலும் குறிப்பிட்டிருக்கும் தீமை எழும் காரணம் குறித்தும் எழுதுகிறேன்.

ஒரு சிறுபான்மையினர் பெரும்பாலான உழைக்கும் மக்களையும் , அவர்களது உழைப்பையும் சுரண்டுவதற்கான காரணம் ஒன்றே. அது ஒடுக்கப்படுபவர்களும் , ஒடுக்குபவர்களும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் , இந்தியா மற்றும் பல இடங்களில் இருப்பது போல வேறு தேசத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் காரணம் ஒன்றே.

இந்தியாவில் இன்னமும் வினோதமான சூழல் இருக்கிறது. அங்கு இருபது கோடி மக்கள் , மிகவும் உடல் பலமும் , மனோபலமும் கொண்டவர்கள், அவர்களிடம் இருந்து மிகவும் வேறுபட்ட சிந்தனையும் , குறைவான ஆன்மீக பலமும் உடைய ஒரு சிறுபான்மையினரால் அடிமைப்படுத்தப் பட்டுள்ளார்கள்.

உங்களது கடிதத்தில் இருந்தும் , உங்கள் பத்திரிகையில் இருந்த பத்திகளில் இருந்தும் , இந்து துறவியான விவேகானந்தரின் எழுத்துக்களில் இருந்தும் , எல்லாத் தேசங்களின் தீமைக்கும் இருக்கும் காரணம் போலவே , இந்தியாவிலும் வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முறையான ஆன்மீக பாதையும் , அதைக் கடைபிடிக்கச் சரியான விதிமுறைகளும் இல்லாமல் , 'நாகரீகம்' என்ற பெயரில் பொய்யான ஆன்மீகத்தையும் , அறிவியலையும் பின்பற்றுவதே காரணம் என்று தெரிகிறது.

இந்திய அரசியல் பத்திகளில் இருந்தும் , உங்கள் பத்திரிகை செய்திகளில் இருந்தும் எனக்குத் தெரிவது - உங்கள் மக்கள் தலைவர்கள் , இந்தியாவின் ஆன்மீக வாழ்வை புரிந்து கொள்ளாது , ஆங்கிலேயர்களும் , மற்ற போலி கிறிஸ்தவத் தேசங்களும் பின்பற்றும் அதே பொருத்தமற்ற , ஒழுக்கக்கேடான முறைகளைப்

பின்பற்றியே ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுகிறார்கள் என்பது.

ஆனால் , இந்த ஒடுக்குமுறையின் காரணமே இந்திய மக்களை ஆங்கிலேயர்கள் அடிமை படுத்தி வைத்திருப்பதன் காரணம் - ஆன்மீக விழிப்புணர்வும் , அதன் பாதையில் செல்லும் தெளிவும் இல்லாமல் இருப்பதே. அதுவே கிழக்கிலும் , மேற்கிலும் , ஜப்பானில் இருந்து இங்கிலாந்து , அமெரிக்கா வரையிலான காரணமாகும்.

//

"மனிதனே ! தலைக்கு மேலும் , காலுக்குக் கீழும் , வலது மற்றும் இடது பக்கங்களிலும் குழப்பத்துடன் இருக்கிறாய். குழந்தைகளைப் போலப் பணிவுடனும் , மகிழ்ச்சியுடனும் இருக்கக் கற்றுக் கொள்ளும் வரை நீ குழப்பத்துடனே இருப்பாய். பின்னர் நீ என்னைக் கண்டறிவாய். என்னைக் கண்டறிந்தவுடன் உலகை ஆள்வாய் ! உன் உள்ளிருக்கும் அந்தப் பெரிய உலகில் இருந்து வெளியிலிருக்கும் இந்தச் சிறிய உலகை நோக்கி , அனைத்தையும் ஆசிர்வதித்து , அனைத்தும் உனக்கும் , உலகிற்கும் நன்றாக இருப்பதை உணர்வாய். "

\- கிருஷ்ணர்

என்னுடைய எண்ணங்களைத் தெளிவாகக் கூற , நாம் காலத்தில் சற்றுப் பின்னோக்கி செல்ல வேண்டும். பல நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னோ , ஏன் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் கூட மனிதர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்று நம்மால் கூற முடியாது. ஆனால் மனிதர்கள் குழுக்களாகவும் , குடும்பங்களாகவும் , தேசங்களாகவும் வாழ ஆரம்பித்ததில் இருந்தே , பெரும்பாலானவர்கள் , ஒன்றோ அல்லது சில நபர்களின் தலைமையை ஒப்புக் கொண்டு , அவர்களுக்கு அடங்கியே

வாழ்ந்து வந்திருக்கின்றனர். வேறு வேறு சூழ்நிலைகளிலும் , நிலைகளிலும் மனிதகுல வாழ்வை பற்றி நமக்குத் தெரிந்த காலத்தில் இருந்து இந்த நிலையே தொடர்ந்து வந்துள்ளது. காலத்தில் பின் செல்ல செல்ல , ஆளுபவர்களும் , ஆளப்படுபவர்களுமாக , மக்கள் அமைதியாக வாழ இந்த முறையே இருந்திருக்கிறது.

எனவே இந்த முறை எல்லா இடங்களிலும் இருந்தது என்று கூற முடியும். ஆனால் வெளிப்புற ஒழுங்காக , இந்த முறையில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக , இன்றைய காலம் வரை உயிர்கள் வாழ்ந்து வந்தாலும் , ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே , பல்வேறு நாடுகளிலும் வன்முறையினால் நிலைநிறுத்தப் பட்டிருக்கும் இந்த முறையின் நடுவே ஒரு சிந்தனை தோன்றியது. ஒவ்வொரு தனி நபரிடமும் ஒரு ஆன்மாவும் , அந்த ஆன்மாவே உயிராகவும் இருக்கிறது. அந்த ஆன்மா தன்னைச் சுற்றி இருக்கும் உயிர்களுடன் ஒன்றிணைய அன்பின் மூலமாக முயல்கிறது. இந்தச் சிந்தனை வெவ்வேறு இடங்களிலும் , காலங்களிலும் பல்வேறு முறையான வழிகளில் முழுமையாகவும் , தெளிவாகவும் வெளிப்பட்டு வந்திருக்கிறது. இதுவே பிராமண மதம் , யூத மதம் , பார்சிகள் மதம் , புத்த மதம் , தாவோ , கன்பியூசியஸ் மற்றும் கிரேக்க, ரோம சிந்தனையாளர்களின் எழுத்துக்களிலும் , கிறிஸ்தவ மற்றும் முகமதிய மதங்களிலும் சொல்லப்பட்டு வந்துள்ளது. இந்தச் சிந்தனை பல்வேறு நாடுகளில் , பல்வேறு காலங்களில் தோன்றியுள்ளது என்பதே இது மனித குலத்தின் ஆதாரமான சிந்தனை என்பதற்கும் , இதுவே உண்மை என்பதற்கும் ஆதாரமாகும். ஆனால் இந்தச் சிந்தனை , மக்களை ஒரு சிறு குழுவினர் ஒடுக்கி வைத்திருப்பதே ஒன்றாக வாழ்வதற்கு வழியாகும் என்ற நம்பிக்கை இருப்பவர்களிடம் சொல்லப்பட்டது. எனவே சமுதாயத்தின் நிலையோடு ஒத்துப்போகாத சிந்தனையாகக் கருதப்பட்டது. மேலும் , முதலில் சிறு துண்டுகளாக வெளிப்பட்டதால் , மக்கள் இதன் உண்மையை உணர்ந்தாலும் , இதைக் கடைபிடிக்க

இயலாது என்றே நினைத்தனர். அதிகாரத்தில் இருந்தவர்களும் இந்த உண்மை பரவுவது வன்முறையால் கட்டி எழுப்பப்பட்ட சமுதாயத்தில் , தங்களின் நிலையைப் பாதிக்கும் என்பதால் , இதைப் பல வழிகளில் சிதைத்தும் , உண்மையை மறைத்தும் , வன்முறையால் எதிர்த்தும் வந்தனர். எனவே மனிதனின் வாழ்வை வழி நடத்தும் ஆன்மா , அன்பாகவே தன்னை வெளிப்படுத்தும் என்ற இந்த உண்மை , அதை அறியாதவர்களாலும் , அறிந்தவர்களாலும் , தெரிந்தும் , தெரியாமலும் குழப்பட்டும் , சிதைக்கப்பட்டும் , வன்முறையால் எதிர்க்கப்பட்டும் , ஆளும் வர்க்கத்தினரால் மத ரீதியான சட்டங்கள் மூலம் தண்டனைகளும் , ஒடுக்குமுறைகளும் ஏவப்பட்டும் மறைக்க வைக்கப்பட்டது. இந்தத் தடங்கல்களும் , உண்மையை மறைக்கும் முயற்சிகளும் , தெளிவின்மையை அதிகப்படுத்தும் முயற்சிகளும் எல்லா இடங்களிலும் நடந்தது - கன்பியூஸிஸ் , தாவோ மதங்கள் , புத்தம் , கிறிஸ்தவம் , முகமதியர்களின் மதத்திலும் , உங்கள் மதமான பிராமண மதத்திலும் நடந்தது.

///

"நான் எல்லா இடங்களிலும் அன்பையே விதைக்கிறேன். பெறுபவர்கள் அனைவருக்கும் தருகிறேன். என் குழந்தைகள் அனைவரையும் ஆசிர்வதிக்கிறேன். ஆனால் அவர்கள் அதைப் பார்க்க இயலாமல் இருக்கிறார்கள். தங்கள் காலடியில் இருக்கும் என் ஆசிர்வாதத்தைப் பார்ப்பவர்கள் சிறிய அளவிலேயே இருக்கிறார்கள். அதைப் பார்க்கவும் செய்யாமல் , நான் அவர்களைக் கைவிட்டு விட்டதாக அழுது , புலம்புபவர்கள் எத்தனை பேர் ? அவர்கள் என் ஆசிர்வாதத்தை மட்டுமல்ல , அவர்களின் கர்த்தாவாகிய என்னையும் நிராகரிக்கிறார்கள். "

- கிருஷ்ணர்

"உலகின் சண்டைகள் , சச்சரவுகளில் இருந்தும் சற்று விலகி இருக்கிறேன். உன்னுடைய வாழ்வை நான் அன்பாலும் , மகிழ்ச்சியாலும் நிரப்புவேன். ஏனென்றால் , ஆன்மாவின் விளக்கு அன்புதான். அன்பு

எங்கிருக்கிறதோ , அங்கே அமைதியும் , திருப்தியும் இருக்கிறது. அமைதியும் , திருப்தியும் இருக்கிற இடத்தில் நானும் இருப்பேன். "

- கிருஷ்ணர்

"சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமந் தரும்.

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை.

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும். "

- குறள்

இப்படியே எல்லா இடங்களிலும் நடந்தது. அன்பே உலகின் உன்னதமான உண்மையும் , நீதியுமாகும் என்பதை யாரும் மறுக்கவோ , மாறுபட்டு பேசவோ இல்லை. ஆனால் இந்த உண்மையுடன் பல பொய்களும் சேர்க்கப்பட்டு , அதன் உண்மை மறைக்கப்பட்டு , இறுதியாக வெறும் வார்த்தைகள் மட்டுமே மிஞ்சியது. அன்பு என்பது தனிப்பட்ட வாழ்விற்கு மட்டுமே என்றும் , பொது வாழ்வில் அனைத்து விதமான வன்முறைகளும் - சிறைகள் , கொலைகள் , போர்கள் - தீமை செய்பவர்களிடம் இருந்து பெரும்பாலான மக்களைக் காக்க தேவை என்றும் கற்றுத் தரப்பட்டது. இது அன்பின் வழிக்கு நேரெதிராக இருந்தது. எல்லோருடைய நன்மைக்காகவும் , சிலர் தீமை செய்பவர்களுக்கு எதிராக வன்முறையைப் பிரயோகிக்க முடிவு செய்தால் ,

வன்முறையால் தாக்கப்படுபவர்களும் அவர்களை நோக்கி அதைப் பிரயோக படுத்துவார்கள். பிராமண மதம் , புத்தம் மற்றும் கிறிஸ்தவத்தின் பெரும் ஆன்மீக ஆசிரியர்கள் அனைவரும் இது போன்று தங்களது போதனைகள் மாற்றப்படும் என்பதை உணர்ந்தே , அன்பின் ஒரு மாற்றவியலாத விதியை (அதாவது , காயங்கள் , வன்முறை போன்றவற்றைத் தாங்கிக் கொண்டு தீமையை , தீமையால் எதிர்க்காமல் இருப்பது) நோக்கி நமது கவனத்தை ஈர்த்தார்கள். ஆனாலும் மக்கள் , இரு துருவங்களான - அன்பையும் , அன்பிற்கு நேரெதிராகத் தீமையை வன்முறை கொண்டு அடக்குதலையும் சேர்க்கவே முயன்றார்கள். தனக்குள்ளே எதிர்மறையைக் கொண்டிருக்கும் இந்தப் புரிதலை , அன்பை மிகப் பெரும் நன்மையாகக் கருதுபவர்களும் கொண்டிருக்கின்றனர். இவர்கள் வாழ்வை நெறிப்படுத்த வன்முறை தேவை என்றும் , மனிதர்களைத் துன்புறுத்துவதும் , ஏன் , கொல்வதும் கூட அவசியம் என்று கருதுகிறார்கள்.

இந்த எதிர்மறை எண்ணத்தோடு மக்கள் பல காலம் வாழ்ந்து வந்தார்கள். பல நாடுகளின் பெரும் சிந்தனையாளர்கள் இந்த எதிர்மறையை அறிந்தே இருந்தார்கள். மனிதர்கள் ஒருவரை ஒருவர் நேசித்து அன்போடு சேர்ந்து வாழ்வதே இயற்கையின் நியதி என்பதும் , அவர்கள் ஒருவரை ஒருவர் துன்புறுத்தி , கொன்று கொண்டு இருப்பது தவறு என்பது காலப்போக்கில் பலருக்கும் புரிந்தது. இந்த உண்மையை மறைக்கும் பேச்சுக்களை இப்போது கேட்டு நம்புபவர்கள் சிலரே.

ஜார் மன்னர்கள் , சுல்தான்கள் , ராஜாக்கள் , ஷா மற்றும் பல நாட்டு ஆட்சியாளர்களும் தங்களுக்கு இறைவனின் ஆசி இருப்பதாகக் கூறி , அன்பின் வழி நீங்கி , வன்முறையை ஏவுவதை நியாயப்படுத்தி வந்தார்கள். அதிகாரத்தில் இருப்பவர்களின் இந்தக் கடவுள்-தந்த-கொடையைக் காலப்போக்கில் மக்கள் நம்ப மறுத்தார்கள்.

இந்த நம்பிக்கை கிறிஸ்தவ உலகிலும் , பிராமண உலகிலும் , புத்தர் மற்றும் கண்பியூசியஸ் உலகிலும் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் முடிவுக்கு வந்தது. தற்போதோ , மனிதனின் புரிதலுக்கும் , உண்மையான ஆன்மீக நம்பிக்கைக்கும் எதிரான இந்த நம்பிக்கையைக் கொண்டிருப்பவர்கள் சிலரே. தங்களைப் போன்றே இருக்கும் மற்ற மக்களின் மீது வன்முறையின் மூலம் ஆதிக்கம் செலுத்துவதன் தவறை , ஒடுக்கப்பட்ட மக்களை அவர்களுக்கு ஒவ்வாதவற்றை வற்புறுத்தி செய்ய வைப்பதன் நியாயமின்மையைச் சிறிது சிறிதாக , இன்று பெரும்பாலான மக்கள் உணர்ந்தே இருக்கிறார்கள். எனவே , தங்கள் மீது ஆதிக்கம் செலுத்துபவர்களின் இறைத்தன்மையின் நம்பிக்கையை இழந்த மக்கள் , அவர்களின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட முயல்வார்கள். ஆனால் , தங்களைப் போலி இறைவன்களாக நினைத்துக் கொண்டிருக்கும் இந்த ஆட்சியாளர்கள் மட்டும் ஒடுக்குமுறை ஆட்சியில் பலன் பெறவில்லை. காலகாலமாக நடைபெறும் இந்த ஒடுக்குமுறையில் , ஆட்சியாளர்களைச் சுற்றி இருக்கும் பெரும் எண்ணிக்கையிலான மக்களும் பலன் பெற்று இருக்கின்றனர். எனவே தாங்கள் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்ற கதையை மக்கள் நம்பவில்லை என்பதால் , அவர்களைத் தங்கள் அடக்குமுறையில் தொடர்ந்து வைத்திருக்க அவர்கள் புது முறைகளில் முயன்று வருகிறார்கள்.

IV

"குழந்தைகளே ! உங்களை எது வழி நடத்த வேண்டும் தெரியுமா? உலகச் சுகங்களை நோக்கி ஏங்குவதை விட்டுவிடுங்கள். மகிழ்ச்சியையும், அறிவையும் பற்றிய உங்களது தவறான எண்ணங்களை மாற்றிக் கொள்ளுங்கள். தேவையில்லாத ஆசைகளை விட்டுத் தள்ளுங்கள். இதைச் செய்தால் அன்பை உணருவீர்கள். "

-கிருஷ்ணர்

" உங்களை நீங்களே அழித்துக் கொள்ளாதீர்கள். உங்கள் உண்மை நிலையைக் கண்டறியுங்கள். அப்போது நீங்கள் எதைப் பற்றியும் பயப்பட வேண்டாம். "

- கிருஷ்ணர்

பழைய , ஒதுக்கப்பட்ட மதச் சம்பந்தமான ஒப்புதல்களுக்குப் பதில் இப்போது புதிய காரணங்கள் வந்திருக்கின்றன. இவையும் பழைய காரணங்கள் போலவே தள்ளுபடி செய்ய வேண்டியவை என்றாலும் , அவை புதிதாக இருப்பதால் பெரும்பாலான மக்களால் அதை உணர முடியாது. அத்துடன் அதிகாரத்தில் இருப்பவர்கள் இந்தக் காரணங்களைப் புதிய வேகத்தோடு பேசி வருவதால் , இவற்றால் ஒடுக்கப்படும் மக்களே , தங்களின் ஒடுக்குமுறைக்கான காரணங்களை ஒப்புக் கொள்கின்றனர். இந்தப் புதிய காரணங்கள் ' அறிவியல் சார்ந்தவை ' என்று சொல்லப்படுகின்றது. ஆனால் ' அறிவியல் சார்ந்தவை ' என்பதை நாம் ' மதம் சார்ந்தது' என்றே புரிந்து கொள்ள வேண்டும். எப்படி முன்பு 'மதம் சார்ந்த' எதையும் கேள்வி கேட்க முடியாமல் இருந்ததோ , அவ்வாறே இன்று 'அறிவியல் சார்ந்த' எதையும் நாம் கேள்வி கேட்க முடியாது. கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்ட மன்னர்கள் எப்படி அதையே தங்களது வன்முறைக்குக் காரணமாகக் கூறினார்களோ ('கடவுள் மட்டுமே இருக்கிறார்.') , அது இப்போது அறிவியல் சார்ந்த காரணமாக மாறி விட்டது. அதாவது மனிதனை மனிதன் வன்முறையில் வைத்திருப்பது எப்போதும் நடைபெற்று வந்திருப்பதால் , அதுவே இயல்பு என்கிறது. மக்கள் தங்களது பகுத்தறிவும் , மனசாட்சியும் சொல்வது போன்று வாழாமல் , கடந்த காலங்களில் வாழ்ந்தது போன்றே இன்னமும் வாழ வேண்டும் என்பதை ' வரலாற்று நியதி ' என்று அறிவியல் கூறுகிறது. அறிவியல் கூறும் இன்னுமொரு காரணம் , செடி, மரங்கள் , மிருகங்கள் இடையே ' தக்கது பிழைக்கும் ' என்று காலம்தோறும் போராட்டமே நிகழ்கிறது என்றும் , எனவே அதுவே

அவற்றை விட அறிவில் மிகுந்த உயிர்களும் , அறிவும் , அன்பையும் உணர முடிந்த மனிதர்களுக்கும் பொருந்தும் என்கிறது. இவற்றை உணரமுடியாத மிருகங்களுக்கு இருக்கும் காரணமே இந்த இரண்டாவது அறிவியல் காரணமாகும்.

மூன்றாவது காரணம் , பல காலங்களாகக் கூறப்பட்டு வரும் மதச் சம்பந்தமான காரணத்தின் மாற்று வடிவமாகும். அன்பின் மீதான நம்பிக்கை மனித குலத்திற்குத் தேவை என்றாலும் , பெரும்பாலானவர்களைக் காக்க சிறிய அளவிலான மக்களின் மீதான வன்முறை அவசியமே என்பதுதான் அது. இதற்கும் பழைய காரணங்களுக்கும் இருக்கும் ஒரே வித்தியாசம் , ஏன் ஒரு சிலரிடம் மட்டுமே பிறர் மீது வன்முறையை ஏவும் அதிகாரம் கொடுக்கப்படுகிறது என்பதற்கான பதில் மட்டுமே. மதம் சார்ந்த நாட்களில் , இது கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்ட சிலருக்கு மட்டுமே இந்த அதிகாரம் என்றது. இன்றைய போலி அறிவியலோ இதை மக்களின் அதிகாரம் என்கிறது. அதிகாரத்தில் இருப்பவர்களின் முடிவுகளும் , செயல்களும் மக்களின் மூலம் தேர்ந்தெடுக்கப் படும் அரசியலின் நிர்ணயத்தினால் பெறப்படுகிறது என்கிறது.

இதுவே வன்முறை குறித்த அறிவியல் காரணங்கள். இவை வலுவற்ற வாதங்கள் மட்டுமல்ல , பொருந்தாத வாதங்களும் ஆகும். ஆனால் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு இது போன்ற காரணங்கள் தேவைப்படுவதால் , அவர்கள் முன்பு எப்படி ' தேவ கர்ப்பத்தை ' உண்மையெனக் குருட்டுத்தனமாகப் பரப்பினர்களோ, அது போலவே இதையும் பரப்புகிறார்கள். துரதிர்ஷ்டவசமாக , பெரும்பாலான மக்கள் பகட்டுடன் பரப்பப்படும் இந்த 'அறிவியல் உண்மைகளை ' முன்பு எப்படி மதம்-சார்ந்த ' உண்மைகளை' நம்பினார்களோ , அப்படியே நம்புகிறார்கள்.இன்று அதிகாரத்தில் இருக்கும் இரக்கமற்ற எண்ணற்றவர்களால் இவர்கள் ஒடுக்கப்பட்டு ஆளப்படுகிறார்கள்.

V

"நான் யார் ? நீ குழந்தையாக இந்த உலகைப் பார்த்த நாளில் இருந்து யாரைத் தேடிக் கொண்டிருந்தாயோ , உன் இருதயத்தில் யார் என்று தெரியாமலே யாரைப் பற்றி வேண்டிக் கொண்டிருந்தாயோ , நூற்றாயிரக்கணக்கான வருடங்களாக உன்னுடைய ஆன்மாவில் இருந்து வரும் நானே அது. நீ என்னைத் தெரிந்து கொள்ளவில்லை என்று சில நேரங்களில் நான் வருந்துவதுண்டு. சில நேரங்களில் இடங்க பூமியுடன் உன்னைக் கட்டிப் போட்டிருக்கும் சங்கிலியை உடைத்துக் கொண்டு வர வேண்டி , நான் என் தலையை உயர்த்தி , கண்களைத் திறந்து , கைகளை நீட்டி அன்புடனும் , அமைதியுடனும் உன்னை அழைக்கிறேன். "

-கிருஷ்ணர்

கிறிஸ்தவ உலகில் இப்படித்தான் அன்றும் , இன்றும் காலம் சென்று கொண்டிருக்கிறது. ஆனால் பிராமண , புத்த , கண்பியூசிய உலகங்களில் இந்தப் போலி அறிவியல் உண்மைகள் எடுபடாது என்றும் , சீனர்கள் , ஜப்பானியர்கள் , இந்துக்கள் முதலியோர் வன்முறையை நியாயப்படுத்தும் இந்த ஆன்மீக புரட்டை நிராகரித்து , மனிதகுலத்தின் ஆதாரமான அன்பை நோக்கி தங்கள் கண்களைத் திறந்து , கிழக்குலகின் பெரும் ஆசிரியர்களின் போதனைகளைப் தொடர்வார்கள் என்று நம்பிக்கையுடன் இருக்கலாம். ஆனால் ஆன்மீக காரணங்களை நிராகரித்து , அறிவியல் காரணங்களை நம்புவது கிழக்குலகிலும் விரைவாக நடந்து வருகிறது.

உங்களுடைய பத்திரிகையின் பத்தியில் , உங்கள் மக்களுக்கான பொதுவான விதியாக நீங்கள் இப்படிக் கூறுகிறீர்கள் : ' ஒடுக்குமுறையை எதிர்ப்பது நியாயமானது மட்டுமல்ல , தேவையானதும் கூட.

அகிம்சை வழியில் செல்வது பொதுநலத்திற்கும் , தன்னலத்திற்கும் கேடு விளைவிக்கும். '

மனித குலத்தை அதன் துயரங்களில் இருந்து மீட்க அன்பு வழியே சரியானது. உங்களது மக்களின் அடிமைத்தளையை உடைக்கவும் அதுவே சரியான முறையாகும். மனித வாழ்வின் அடிப்படை ஆன்மீக வழியாக அன்பையே உங்களது மக்கள் பழங்காலத்தில் இருந்து தெளிவாகவும் , பலத்துடனும் தொடர்ந்து வந்திருக்கிறார்கள். தீயவர்களுக்கு எதிராக வன்முறையை உபயோகிப்பது அன்பின் வழியில் இருந்து நேரெதிராகவும் , அன்பின் அர்த்தத்தில் இருந்து மாறுபட்டும் இருக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் பிரதிநிதியான நீங்கள் , பெரிய ஆன்மீக பாரம்பரியத்தின் வழியில் வந்த நீங்கள் , உங்களுடைய விஞ்ஞான அறிவின் மீது மிகுந்த நம்பிக்கையுடன் , மிகுந்த உரிமையுடன் வன்முறையைத் தொடர்பவர்களின் முட்டாள்தனமான வாதங்களையும் (இதைத் தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம்) , உண்மையின் எதிரிகளும் , முதலில் மதத்தின் மற்றும் இப்போது அறிவியலின் சேவகர்களான உங்களுடைய ஐரோப்பிய ஆசிரியர்களின் வாதங்களை வைத்து உங்களுடைய ஆன்மீகம் கூறும் அன்பின் வழியை மறுக்கிறாய்.

ஆங்கிலேயர்கள் உங்களது மக்களை அடிமை படுத்தி வைத்திருப்பதற்குக் காரணம் , உங்கள் மக்கள் அவர்களை வலுவாக எதிர்க்காததாலும் , வன்முறையை , வன்முறை கொண்டு எதிர்க்காததாலும் என்று நீங்கள் கூறுகிறீர்கள்.

ஆனால் உண்மை இதற்கு நேரெதிரானது. ஆங்கிலேயர்கள் இந்தியாவை அடிமை படுத்தி வைத்திருப்பதன் காரணம் , இந்திய மக்கள் வன்முறையைச் சமூக ஒழுங்கை நிலைநிறுத்தும் வழியாக நம்பி இருப்பதே. இதனாலேயே அவர்கள் முன்பு அவர்களது சிறு ராஜாக்களுக்கு அடிமையாகவும் , அவர்களின் பொருட்டு ஐரோப்பியர்களுடனும் ,

ஆங்கிலேயர்களுடனும் சண்டையிட்டும் - இப்போது மறுபடியும் ஆங்கிலேயர்களிடம் அடிமைபட்டுக் கிடக்கிறார்கள்.

இருபது கோடி மக்களை ஒரு வணிக நிறுவனம் அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது. இதை மூடநம்பிக்கை இல்லாத மனிதனிடம் சொல்லிப் பாருங்கள். அவனால் இதை நம்பவும் முடியாது. மிகவும் சாதாரணமான , மிகுந்த பலம் இல்லாத முப்பது ஆயிரம் நபர்கள் , அறிவும் , ஆற்றலும் கொண்ட , விடுதலையை விரும்பும் இருபது கோடி மக்களை அடிமை படுத்தி வைத்திருப்பதை எப்படிப் புரிந்து கொள்வது ? இதிலிருந்து ஆங்கிலேயர்கள் இந்தியர்களை அடிமைப்படுத்தவில்லை , இந்தியர்களே தங்களை அடிமைகளாக வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லையா ?

ஆங்கிலேயர்கள் தங்களை அடிமைப்படுத்தி வைத்திருப்பதாகக் கூறுவது குடிகாரர்கள் , சாராய வியாபாரிகள் தங்களை அடிமைப்படுத்தி வைத்திருப்பதாகக் கூறுவது போலாகும். அவர்களிடம் குடியை விடச் சொன்னால் , தங்கள் குடிக்கு பழகிவிட்டதால் தங்களால் அதை விடமுடியாது என்றும் , சாராயம் அவர்களை உயிருடன் வைத்திருக்கிறது என்றும் கூறுவார்கள். கோடிக்கணக்கான மக்கள் தங்கள் நாட்டைச் சேர்ந்த அல்லது வேறு நாட்டைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்களிடமோ , ஏன் நூற்றுக்கணக்கானவர்களிடமோ அடிமையாக இருப்பதும் அது போன்ற ஒன்றல்லவா ?

இந்திய மக்கள் வன்முறையால் அடிமைப்படுத்தப் பட்டார்கள் என்றால் , அது அவர்கள் வன்முறையால் வாழ்ந்து கொண்டிருப்பதாலேயே. மனித குலத்தின் நியதியான அன்பை அவர்கள் உணராமல் இருப்பதே காரணம்.

" தன்னிடம் இருப்பதை உணராமல் , அதையே தேடும் மனிதன் பரிதாபத்துக்கு உரிய முட்டாளாகும். நான் அவனுக்குத் தந்த, அவனைச் சூழ்ந்திருக்கும் அன்பை தெரியாத அவன் பரிதாபத்திற்கு உரியவன். "

-கிருஷ்ணர்

மனிதர்கள் தங்களது இதயத்தின் இயற்கையான அன்பின் வழியில் , வன்முறையை வன்முறையால் எதிர்க்காமல் , வன்முறையில் இருந்து விலகினால் , அப்போது நூற்றுக்கணக்கானவர்களால் கோடிக்கணக்கானவர்களை மட்டுமல்ல , கோடி கணக்கானவர்களால் ஒருவரைக் கூட அடிமைப்படுத்த முடியாது. தீமை செய்பவனை எதிர்க்காதீர்கள். வன்முறை அரசின் நீதி மன்றங்களிலோ , வரி வசூலிப்பதிலோ , படைகளிலோ பங்கெடுக்காமல் இருந்தால் இந்த உலகில் எவராலும் உங்களை அடிமைப்படுத்த முடியாது.

VI

"தளைகளுடன் , சுதந்திரம் தேடி ஏங்குபவர்களே , அன்பை மட்டும் தேடுங்கள். அன்பே அமைதி. அமைதியே மனநிம்மதி. மனநிம்மதியின் கதவை திறக்கும் சாவி நானே. "

- கிருஷ்ணர்

ஒரு மனிதன் குழந்தையாக இருந்து , வளர்ந்து , வாலிபனாகவும் , வாலிபத்தில் இருந்து முழு மனிதனாக மாறும் நிலையே கிழக்குலகத்திலும் , மேற்கிலும் இப்போது மக்களுக்கு நிகழ்ந்து கொண்டிருப்பது ஆகும். அதுவரை அவனை வழிநடத்திய எல்லாம் இழந்து , திசை தெரியாமல் , அவனது வயதுக்கு ஏற்ற வழியைத் தெரியாமல் , தனக்குப் புதியதாக வேலைகளையும் , கவலைகளை ஏற்படுத்தியும் , கவனத்தைச் சிதறவிட்டும் தன் வாழ்வின் நோக்கமின்மையையும் , துயரத்தையும்

மறக்க முயலுகிறான். இந்த நிலை பல காலத்திற்கு நீடிக்கலாம்.

ஒரு மனிதன் வாழ்வின் ஒரு கட்டத்தில் இருந்து இன்னொரு கட்டத்திற்குச் செல்லும் போது முன்பு போல உணர்ச்சிகளால் தூண்டப்பட்டு , வெறும் கேளிக்கையாக வாழ்வை கழிக்க முடியாது என்ற நிலையில் , முன்பு தன்னை வழிநடத்திய விதிகளில் இருந்து தான் வெகு தூரம் வந்துவிட்டதை உணரவேண்டும். தன் வயதிற்கேற்ற விதிகளை ஏற்படுத்திக் கொண்டு , அவற்றின் துணையுடன் வாழ ஆரம்பிக்க வேண்டும். அது போலவே , மனித குலத்திற்கும் , அதன் வளர்ச்சிக்கும் ஒரு நேரம் வரும். அது போன்ற ஒரு நேரம் இப்போது வந்துவிட்டது என்று நான் நினைக்கிறேன். அதாவது , 1908இல் அது வந்துவிட்டது என்று நினைக்கவில்லை. மாறாக , மனித வாழ்வின் முரண்பாடுகள் அதன் கடைசிக் கட்டத்தின் தீவிரத்தை அடைந்து விட்டது. ஒரு புறம் அன்பின் வழியினாலேயே கிடைக்கும் பலன்கள் , மறுபுறம் பல நூற்றாண்டுகளாக வாழும் , வன்முறையால் கட்டப்பட்ட வெறுமையும் , துயரமும் நிறைந்த வாழ்வு. அன்பின் வாழ்வின் நேர்மாறான இந்த வாழ்வை நோக்கி , அதன் தீர்வாகப் பார்க்கவேண்டியது வன்முறையை அல்ல. மாறாக , மனிதனின் மனதில் பழங்காலத்தில் இருந்து வரும் 'அன்பின் வழியே மனித இயற்கையாகும் ' என்ற உண்மையையே .

ஆனால் , மனிதன் இதை உணர வேண்டும் என்றால் , பல நூற்றாண்டுகளாகக் கட்டமைக்கப்பட்டு வந்துள்ள மதமும் , போலி அறிவியலும் சார்ந்த நம்பிக்கைகளில் இருந்து விடுபட வேண்டும். அந்த நம்பிக்கைகளைக் கொண்டு பல நூற்றாண்டுகளாக அன்பின் வழியைக் குழப்பி வந்திருக்கும் பேச்சுகளைத் தெரிந்து கொள்ளவும் வேண்டும்.

மூழ்கி கொண்டிருக்கும் கப்பலைக் காக்க , அதன் பாரத்தைக் கடலில் தூக்கி எறிய வேண்டும். அந்தப் பாரமே

ஒரு காலத்தில் கப்பலுக்குத் தேவைப்பட்டிருந்தாலும் , இப்போது அதைத் தூக்கி எறிவது அவசியமாகும். மனித குலத்தின் நன்மையை மறைக்கும் அறிவியல் மூடநம்பிக்கைகளும் அப்படியே. மனிதர்கள் இந்த உண்மையை உணரவேண்டும் என்றால் , அவர்கள் குழந்தையாக இருந்த தெளிவில்லாத புரிதலோ , மத , அறிவியல் ஆசிரியர்கள் உரைத்த அரைகுறையான உண்மைகள் இல்லாமல் , எல்லா மத , போலி அறிவியல் மூடநம்பிக்கைகளில் இருந்தும் விடைபெற்ற உண்மையைப் புரிந்து கொள்ளுவது அவசியம். இந்த முயற்சி முழுமையில்லாமலும் , தைரியமில்லாமலும் இருக்கக் கூடாது. சீக்கியர்களின் குருவான குரு நானக் மத ரீதியாகச் செய்த சீர்திருத்தமோ , கிறிஸ்துவத்தில் லூதர் செய்த சீர்திருத்தம் போல் அன்றி , எல்லாப் பழைய மத , புதிய அறிவியல் மூடநம்பிக்கைகளில் இருந்தும் முழுவதுமான விடுதலையாக இருக்க வேண்டும்.

மக்கள் ஆர்முஸ்ட்த்துகள் , பிரம்மாக்கள் , ஷபாஅத்கள் , அவர்களின் அவதாரமான கிருஷ்ணா மற்றும் கிறிஸ்து , சொர்க்கம் , நரகம் போன்ற நம்பிக்கைகள் , மறுபிறப்பு , உயிர்த்தெழுதல் போன்றவை , உலகின் நகர்வில் கடவுள்கள் இடையிடுவதாகக் கருதும் நம்பிக்கைகள் , எல்லா வற்றிற்கும் மேல் வேதங்கள் , பைபிள் , குரான் , ட்ரிபிடக , நற்செய்திகள் போன்றவற்றின் தவறில்லாத தன்மை , சிறிய அணுக்கள் , பெரிய தூர உலகங்கள் , அவற்றின் நகர்வுகள் மற்றும் தோற்றம் , அறிவியல் விதிகளின் தவறில்லாத தன்மை போன்றவற்றில் இருந்து விடுதலை பெற வேண்டும். வரலாற்று விதிகள் , பொருளாதார விதிகள் , போராட்ட , விடுதலை விதிகள் , முதலியவற்றில் இருந்தும் , ' அறிவியல்' என்ற பெயரில் இருக்கும் மனித அறிவின் சிந்தனை மற்றும் நினைவுகளில் இருந்தும் , எண்ணவியலாத முறையில் எழுதப்பட்டிருக்கும் வரலாறு , மானுடவியல் , சமய போதனை , நீதி , பிரபஞ்ச நீதி மற்றும் பலவற்றை போன்ற கப்பலின் தேவையான பாரங்களில் இருந்து விடுபட்டால் , மனிதனின் இயற்கையான , எளிமையான அன்பை

குழப்பமான கேள்விகளில் இருந்து விலகி , தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

VII

"குழந்தைகளே! உங்கள் காலடியில் இருக்கும் பூக்களைப் பாருங்கள். அவற்றை மிதியாதீர்கள். உங்கள் நடுவே இருக்கும் அன்பை பாருங்கள். அதை மறுக்காதீர்கள். "

- கிருஷ்ணர்

" எல்லா மனித மனங்களையும் மீறும் ஒரு உயர்ந்த காரணம் இருக்கிறது. அது தொலைவிலும் , அருகிலும் இருக்கிறது. இது எல்லா உலகங்களையும் ஊடுருவி, அதே நேரத்தில் அவற்றை விட உயரத்திலும் உள்ளது. எல்லா உயிர்களுக்குள்ளும் இருக்கும் ஆன்மாவை பார்க்கும் மனிதனால் யாரையும் இகழ்ச்சியாக பார்க்க முடியாது.

அனைத்து ஆன்மாக்களையும் ஒன்றாக பார்ப்பவனுக்கு வருத்தமோ , மோசமோ போவதில்லை.

அறியாமையிலும் , வெறும் மத சடங்குகளிலும் மூழ்கி இருப்பவர்கள் ஆழ்ந்த மனசோர்விலும் , பலனற்ற சிந்தனைகளில் இருப்பவர்கள் இன்னமும் ஆழ்ந்த இருளில் இருக்கிறார்கள். "

- உபநிஷதங்கள் (வேதத்தில் இருந்து)

மனித குலம் தனக்குத் தானே இழைத்துக் கொண்டிருக்கும் பேரழிவின் காத்திரமான தாக்கத்தில் இருந்து நமது காலத்திலேயே அனைத்தும் ஒழித்துக் கட்டப்பட வேண்டும். ஆங்கிலேயரிடம் இருந்து இந்தியர் விடுதலை கேட்கிறாரோ அல்லது எந்தத் தேசத்தைச் சேர்ந்த எவரும் தன்னை ஒடுக்குபவரிடன் இருந்து விடுதலை கேட்கிறாரோ , கறுப்பர்கள் வட அமெரிக்கர்களிடம் இருந்தோ , பாரசீக , ருஷ்ய , துருக்கி மக்கள் , பாரசீக ,

ருஷ்ய , துருக்கி அரசுகளிடம் இருந்தோ அல்லது தன்னுடைய அல்லது பிறரின் நலனைத் தேடும் எந்தத் தனி மனிதனோ - அவர்களுக்கு உங்களது விவேகாநந்தர்களோ , பாபா பாரதிகளோ கூறும் பழைய மத நம்பிக்கைகளும் , விளக்கங்களும் , நியாயங்களும் தேவையில்லை. அது போலவே கிறிஸ்தவ உலகில் இருக்கும் எண்ணற்ற விளக்குபவர்களும் , பிரசங்கிகளும் தேவையில்லை. மக்களுக்குத் தேவையில்லாத , தீமை தரும் பல பொருட்களை விளக்கும் அறிவியல் தத்துவங்களும் தேவையில்லை. (ஆன்மீக உலகிலும் பெரிய வேறுபாடு இல்லை. எது உதவியாக இல்லையோ , அது தீயதாக இருக்கிறது.) இந்தியருக்கும் , ஆங்கிலேயருக்கும் , பிரெஞ்சுக்காரருக்கும் , ஜெர்மனியருக்கும் , ரஷ்யருக்கும் தேவை அரசியல் சாசனங்களோ , புரட்சிகளோ , எல்லாவித மாநாடுகளும் , கூட்டங்களும் அல்ல. அவர்களுக்கு வானில் பறக்கும் தொழில்நுட்பமோ , ஆழ்கடலில் பயணிக்கும் படகுகளோ , பெரும் வெடிகளோ , பெரும் பணக்காரர்களும் , ஆளும் வர்க்கமும் தேடும் சொகுசு பொருட்களோ , புதிய பெரும் பள்ளிகளோ , பல்கலைக்கழகங்களோ தேவையில்லை. ஒன்றே ஒன்றுதான் தேவை. மத , அறிவியல் மூடநம்பிக்கைகளால் பாதிக்கப்படாத ஆன்மாவின் உள்ளே இருக்கும் ஒரு எளிமையான , தெளிவான உண்மை. அதாவது வாழ்வில் ஒரு நீதி மட்டுமே உண்மையானது. அது தனிநபருக்கு மட்டும் இன்றி , மனிதகுலத்திற்கு உயர்ந்த மகிழ்ச்சியைத் தரக்கூடிய அன்பின் நீதியாகும். அந்த நீதியை உணர தடையாக இருக்கும் மலை போல உயர்ந்த நமது அறிவின்மையை அறிந்து கொள்ளுங்கள். அதை அறிந்தால் , போலி ஆன்மீக மூடநம்பிக்கைகளில் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கும் உண்மை வெளிவந்துவிடும். உலகின் எல்லாப் பெரும் மதங்களும் போதிக்கும் ஒரே தெளிவான , நித்தியமான உண்மை அது. காலத்தின் போக்கில் தானாக வெளி வந்து விடும். அதை மறைத்து நிற்கும் மூட எண்ணங்கள் தானாக மறைந்துவிடும். அப்போது அன்பின் நீதி தன்னை வெளிப்படுத்தும் போது , மனிதகுலம் இப்போது

அனுபவித்து வரும் எல்லாத் தீமைகளும் மறைந்து போகும்.

> *"குழந்தைகளே , மறைத்துக் கொண்டிருக்கும் உங்கள் கண்களை மேல்நோக்கி திருப்புங்கள். , மகிழ்ச்சியும் , அன்பும் உடைய ஒரு உலகம் உங்களுக்குத் தெரியும். என்னுடைய ஞானத்தினால் உண்டான உண்மையான உலகம். அப்போது அன்பினால் நீங்கள் பெற்றவற்றையும் , அன்பு உங்களுக்குத் தந்தவைகளையும் , அன்பு உங்களிடம் எதிர்பார்ப்பதையும் உணருவீர்கள். "*
>
> - கிருஷ்ணர்

யஸ்நயா போல்யானா.
டிசம்பர் 14 , 1908.

இந்த ஆசிரியரின் புத்தகங்கள்

[1877 : தாது வருடப் பஞ்சம்]

சமூகத்தின் கூட்டு நினைவுகளில் சில நிகழ்வுகள் பெரும் தாக்கத்தை நிகழ்த்துவதால் , அவை மறக்கப்படாமல் சந்ததிகளுக்குக் கடத்தப்படும். 1877ம் வருடத்திய தாது வருட பஞ்சம் அத்தகைய நிகழ்வு.
வில்லியம் டிக்பி 1878 ஜூலை மாதம் இந்தப் புத்தகத்தை எழுதுகிறார். அவரே அதை எழுத வேண்டியதன் அவசியத்தைக் குறிக்கிறார். ஒரு ஆங்கிலேயரின் பார்வையில் , பெரும்பாலும் அரசாங்கம் இந்தப் பேரழிவை எப்படி எதிர்கொண்டது என்பதை மனசாட்சியுடன் எழுதுகிறார்.
இரண்டு பாகங்களாக எழுதப்பட்ட இந்தப் புத்தகத்தின் , முதல் பாகத்தில் மெட்ராஸ் மாகாணம் குறித்த அத்தியாயங்களை மட்டுமே மொழிபெயர்த்திருக்கிறேன். பின்னிணைப்பாக , இரண்டாவது பாகத்தில் இருக்கும் சிலோன் குடியேற்றம் பற்றிய பகுதியை தந்துள்ளேன்.

[வரலாற்றில் வழிகாட்டிய செப்பேடுகள்]

தமிழர் வரலாற்றின் முக்கிய ஆவணங்களான கூரம் , திருவாலங்காடு , அன்பில் , வேலூர்ப்பாளயம் , லெய்டன் , திருநெல்லி , வேள்விக்குடி செப்பேடுகள் கண்டறியப்பட்டபோது அவை என்ன மாதிரியான விவாதங்களையும் , இன்று நாம் எளிதாக எடுத்துக் கொள்ளும் பல்லவ , சோழ , பாண்டிய , சேர மன்னர்களைப் பற்றிய நமது புரிதலை அவை எப்படி முன்னெடுத்து சென்றன என்றும் இந்த கட்டுரைகளில் தெரிந்து கொள்ளலாம்.

தென்னிந்திய கிராம தெய்வங்கள்

1921இல் எழுதப்பட்ட இந்த நூல் , தென்னிந்திய கிராமங்களில் நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்த சமய நம்பிக்கைகளை ஆவணப்படுத்துகிறது. ஆந்திர , கன்னட , தமிழ் தேசங்களில் இருந்த நம்பிக்கைகள் , அவற்றின் வேறுபாடுகள் , நாட்டுப்புறக் கதைகள் மற்றும் இவற்றின் தோற்றம் குறித்தான அனுமானங்கள் என்று இந்த சிறிய புத்தகத்தில் பலவற்றையும் தொட்டுச் செல்கிறார்.

நீலகிரி: பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிவசமுத்திரம் மற்றும் நீலகிரி பயணக் குறிப்புகள்

1834இல் இந்தியாவில் இருந்து திரும்பி இங்கிலாந்து செல்லும் பயணத்தின் போது , லெப். ஜெர்விஸ் , நீலகிரி பற்றிய தனது நினைவுகளை பதிவு செய்கிறார். ஆங்கிலேயர்கள் நீலகிரியை கண்டறிந்து பதினைந்து வருடமே ஆகியிருந்தது. நீலகிரிக்கு செல்லும் வழி , தங்கும் இடங்கள் , அங்கு பார்க்க வேண்டியது , வேட்டையாட வேண்டிய விஷயங்கள் என பலவற்றையும் தொட்டுச் செல்கிறார்.

கொற்கை

ஆதிச்சநல்லூரில் அகழ்வு எப்போது ஆரம்பித்தது என்ற என் கேள்விக்கு விடை தேடியபோது கிடைத்த பதில்களே இவை. தாமிரபரணி நதியின் இரு புறமும் இருக்கும் பல தொல்லியல் இடங்களும் அவற்றின் கண்டுபிடிப்புகளும் , கொற்கையைத் தேடிய கால்டுவெல் பாதிரியின் ஆரம்ப அகழ்விலேயே ஆரம்பிக்கின்றன. கால்டுவெல்லின் ஆய்வுக்கு பின் முனைவர் அலெக்சாண்டர் ரீயா , முதலில் பெரிய அளவில் இந்த நதிக்கரையில் அகழ்வை நிகழ்த்துகிறார்.

பிரைட் அண்ட் பிரிஜூடிஸ் : புத்தகம் ஒன்று

ஆங்கில இலக்கியத்தின் சிறந்த நாவல்கள் என்று எடுக்கப்படும் எந்த பட்டியலிலும் , முதல் பத்து இடங்களுக்குள் ' பிரைட் அண்ட் பிரிஜூடிஸ் ' வந்துவிடும். மிகவும் விரும்பப்படும் நாவல்கள் என்பதிலும் இல்லாமல் இருக்காது.

பிரைட் அண்ட் பிரிஜூடிஸ்: புத்தகம் இரண்டு

ஆங்கில இலக்கியத்தின் சிறந்த நாவல்கள் என்று எடுக்கப்படும் எந்த பட்டியலிலும் , முதல் பத்து இடங்களுக்குள் ' பிரைட் அண்ட் பிரிஜூடிஸ் ' வந்துவிடும். மிகவும் விரும்பப்படும் நாவல்கள் என்பதிலும் இல்லாமல் இருக்காது. தமிழில் ஒரு சரியான , முழுமையான மொழிபெயர்ப்பு இதுவரை வந்ததாக தெரியவில்லை. இதுவே முதலாவதாக இருக்கும் என்று நம்புகிறேன். ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது போலவே இரண்டு பாகங்களாக வெளிவரப்போகும் இந்த நாவலின் இரண்டாம் பாகம் இது.

வரலாற்றின் சுவட்டில்...: பயணக் கட்டுரைகள்

சோழ , பல்லவ கோயில்களுக்கு நன் சென்று வந்த அனுபவங்களே இவை. இந்தக்கோயில்கள் பல இன்று பெரும்பாலும் யாரும் பக்திக்காகவோ , சுற்றுலாவாகவே வந்து பார்க்காமல் பாழடைந்து வருகின்றன. நமது தமிழ் கலாச்சாரத்தின் முக்கிய அங்கமான இந்த கோயில்களின் நிலை , அவற்றின் சிறப்பு என எனக்கு தெரிந்த வரையில் பதிவு செய்திருக்கிறேன்.

தென்னிந்திய நாட்டுப்புறக் கதைகள்

1890இல் பதிப்பிக்கப் பட்ட இந்தப் புத்தகம் மொத்தம் 26 கதைகளை உடையது. ஆசிரியர் இந்தக் கதைகளை தான் சேகரித்தது பற்றி முன்னுரையில் கூறுகிறார். இவற்றைப் பற்றிய பல விஷயங்களை அறிமுகத்திலும் கூறுகிறார்.

பல கதைகளின் பின் குறிப்புகளாக , அந்தக் கதைகள் பற்றிய பல சுவாரசியமான சங்கதிகளைக் கூறுகிறார்.

அடர் வனத்தின் யட்சி

கவிதை மனம் என்பது வெகு சிலருக்கே வாய்ப்பது. இன்னும் சிலருக்கு எப்போதோ சில நேரங்களில் மட்டுமே வாய்ப்பது. அதுவும் கார்பொரேட் உலகில் உழன்றுக் கொண்டிருக்கும் என் போன்றோருக்கு இன்னமும் அரிதாகவே அது வாய்க்கிறது. அது போன்ற சில நேரங்களில் எழுதப்பட்டவையே இவை.

Temples Of South India: And A Few Museums

This is a collection of my travel writings from my blog. The focus is on the temples of south India and I have chosen only those that may be of interest to the general reader. These temples not only are famous for their artistic beauty, but are also story tellers of the south Indian past. The Chalukyas, Cholas, Kakatiyas , Hoysalas, Pallavas - who built these houses of worship , also made sure they stand to tell their story.

குடுமி பற்றிய சிந்தனைகள்

1860களில் தென்னிந்திய கிறிஸ்தவ சபைகளில் புதிதாக சபைக்கு வருபவர்களும், சபைக்காக வேலை பார்ப்பவர்களும் குடுமி வைத்து கொள்ளலாமா கூடாதா என்று ஒரு விவாதம் நடைபெற்றது. அருட்திரு. ராபர்ட் கால்டுவெல் அவர்கள் தனது கருத்துகளை ஒரு நாளிதழுக்காக 1867இல் எழுதினார்.

பல்லவர்கள் : தொன்மையியல் வரலாறு: பாகம் I & II

1916-17இல் இரண்டு பாகங்களாக பதிப்பிக்கப்பட்ட இந்தப் புத்தகம் , பல்லவர்களின் வரலாற்று புத்தகம் அல்ல. இது

பல்லவர்களின் கலை வரலாற்றை ஆவணப்படுத்தும் புத்தகம். பல்லவக் கலைச்சின்னங்களைப் ஆராய்ந்து , அவற்றின் மூலம் பல்லவ வரலாற்றை அறிந்து கொள்ளும் முயற்சி .